**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 136/2020**

**வா.சா.1 – தேசமணி**

**<u>25–06–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் மெர்சென்டைசராக தொழில் செய்து வருகிறேன். எனக்கு 2ம் பிரதிவாதி காமராஜ் தாய்மாமன் ஆவார். எனக்கும் காமராஜ்க்கும் சொத்து தகராறு உள்ளது என்றால் சரியல்ல. தகராறு உள்ளது என்றும் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாயார் பெயரில் எனது தாய்வழி பாட்டி சொத்து எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். அதனை 2ம் பிரதிவாதி தடுத்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின், அவரது தந்தை ராஜேந்திரன், அவரது தாய் செல்வராணி ஆகியோர்களின் வங்கி கணக்கு விபரம் பற்றி 2ம் பிரதிவாதிதான் கூறினார் என்றால் சரிதான்.

2. 1ம் பிரதிவாயின் பெற்றோர்களின் வங்கி வழக்கு தொகை பறிமாற்றம் பற்றி வழக்கிற்கு முன்பு தெரியாது என்றால் சரியல்ல. வழக்கிற்கு முன்பு தெரியும் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டபிறகு தான் 1ம் பிரதிவாதியின் குடும்பத்தின் வங்கி விபரங்களை கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் 2ம் பிரதிவாதி என்னிடம் கடன் கேட்கவில்லை. நான் 1ம் பிரதிவாதியின் எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால் ரூ.22500/– கொடுத்தேன்.

3. மேற்படி தொகையை 1ம் பிரதிவாதியின் தந்தை ராஜேந்திரனிடம் இருந்து 2ம் பிரிதிவாதி பெற்றுக்கொண்ட விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். அதனை 2ம் பிரதிவாதியே என்னிடம் கொடுத்துவிடுகிறார் என்றால் சொன்னார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி மேற்படி தொகையை

கொடுத்துவிடுவதாக உறுதியாதாக கூறியபிறகு 1ம் பிரதிவாதியை தேவையின்றி இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி சிங்கப்பூரில் இருந்து இந்தியா வந்தவுடன் மேற்படி தொகையை கொடுத்துவிடுவதாக குறிப்பிட்டு 1ம் பிரதிவாதி மற்றும் 2ம் பிரதிவாதி , 1ம் பிரதிவாதியின் தந்தை ராஜேந்திரனிடையே சிங்கப்பூர் நோட்டரிமூலம் ஒப்பந்தம் செய்யப்பட்டு இருந்தது என்றால் தெரியாது.

4. 1ம் பிரதிவாதி அவரது தந்தை மூலம் மேற்படி தொகையை எனக்கு செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எந்தத்தொகையும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. அவசியம்மற்ற தரப்பினராக 1ம் பிரதிவாதியை சேர்துள்ளதால் வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

(குறுக்கு விராணை முடிக்கப்பட்டது. )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஓம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.